DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Case No: CC.No. 211/2023

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : தமிழரசி
Father/ Husband Name : மகாலிங்கம்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 20.01.2026.

முதல்விசாரணை:- சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தூனுக்குடியில் குடியிருந்து கூலிவேலைக்கு செல்கிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 30.05.2023-ம் தேதி இரவு 09.30 மணியளவில் எனது வீட்டுக்கு முன்னால் நான், எனது தங்கை இந்திராவும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது என் தம்பி மகேஸ்வரன் வந்தார். அப்போது 2 வது எதிரி பாஸ்கரன் தம்பி மகேஸ்வரனை பார்த்து அசிங்கமாக கெட்ட வார்த்தைகளால் திட்டினார். நான் ஏன் அசிங்கமாக பேசிகிறாய் என்று கேட்டேன். அதற்கு தேவிடியா, அவுசாரி என்று என்னை பார்த்து 1ம் எதிரி தங்கராசு, 2ம் எதிரி பாஸ்கரனும் பேசினார்கள். 2ம் எதிரி என் தம்பியைப் பார்த்து கல்யாணம்கூட பண்ணமுடியவில்லை என்று பேசினார்.

2. 1ம் எதிரியின் மகனான 2ம் எதிரி பாஸ்கரன் என்தலையில் கம்பால் அடித்தார். அதில் எனக்கு தலைவலியும், மூக்கில் இரத்தமும் வந்தது. 1ம் எதிரி தங்கராசு தலைமுடியை பிடித்து முதுகில்குத்தி முகத்தில் பிராண்டிகீறி விட்டார். அதில் எனக்கு முகத்தில் இரத்தம் வந்துவிட்டது. அப்போது 2ம் எதிரி என்னைக் கத்தியால் குத்திவிடுவேன் என்று மிரட்டினார். 1ம் எதிரி தங்கராசு அரிவாளை எடுத்து வெட்டவந்து வீட்டை தீவைத்து கொழுத்திவிடுவேன் என்று மிரட்டினார். பிறகு என் தம்பி என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்.

மருத்துவமனையில் நான் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சண்டையின் போது 2 வது எதிரி பாஸ்கரன் என்னுடைய தாலி செயினை அறுத்துவிட்டான். அதில் பாதி செயினை பாஸ்கரன் கையோடு எடுத்துசென்றுவிட்டான். மீதி பாதி என் தங்கையிடம் இருக்கிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

1. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் கையெழுத்து மட்டும் போடத்தெரியும், படிக்க தெரியும். மற்றபடி எழுத தெரியாது. நான் சொல்லசொல்ல என் தங்கை புகாரை எழுதினார். நானும் எதிரிகள் இருவரும் பேசிக் கொள்ள மாட்டோம் என்றால் சரிதான். கடந்த 30.05.2023-ம் தேதி இரவு 09.30 மணியளவில் யார்வீட்டில் யார் இறந்தது என்று புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் 1ம் எதிரியின் அண்ணன் பேத்திதான் இறந்தது. மேற்படி துக்கவீட்டில் விசாரிப்பதற்காக என் தங்கை இந்திராவும், தம்பி மகேஸ்வரனும் வந்திருந்தார்கள் என்றால் சரிதான்.

2. கடந்த 30.05.2023-ம் தேதி இரவு நான் சொல்லிதான் மேற்படி துக்கவீட்டில் துக்கம் விசாரிக்க என் தங்கை இந்திராவும், என் தம்பி மகேஸ்வரனும் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் என் வீட்டில் முன்னால் நடந்தது. என் வீட்டிற்கு பக்கத்து வீடு தங்கராசின் அண்ணன் வீடு. இறப்பு நடந்த வீடு என் வீட்டிலிருந்து 3 வீடு தள்ளி அமைந்துள்ளது. சம்பவம் நடக்கும் போது கூட்டமாக இருந்தார்களா என்றால் ஆட்கள் இருந்தார்கள், யார்யார் இருந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. சம்பவத்தன்று நான் வீட்டில் உட்கார்ந்து நானும், என் தங்கையும் பேசிக் கொண்டு உட்கார்ந்திருந்தோம். அப்போது தான் என் தம்பி வந்தான். புகாரில் என்ன என்ன விவரங்கள் எழுதியிருந்தது என்று நான் படித்துப்பார்க்கவில்லை. நான் நடந்த விவரத்தை சொன்னேன், என் தங்கை எழுதினார். என்னை கம்பால் தலையில் எந்த பகுதியில் அடித்தார்கள் என்று புகாரிலோ, மருத்துவமனையிலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் உச்சந்தலையில் அடித்தார். உச்சந்தலையில் எனக்கு காயம் இல்லை, மூக்குவழியாக இரத்தம்மட்டும் வந்தது, தலைவலியாகவும் மயக்கம்வருவது போலவும் இருந்தது.

3. என்னை அடித்தவுடன் எனக்கு மயக்கம் வந்ததா என்றால் ஆமாம். நான் மயக்கமானவுடன் என்னை யார் மருத்துவமனைக்கு அழைத்துவந்தது என்றால் என் தம்பி மகேஸ்வரன் ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து வந்தார். சம்பவம் நடக்கும் போது அடித்துவிட்டதாக ஊர்பெரியவர்கள் யாரிடமாவது சொன்னேனா என்றால் நாங்கள் அடிபட்டு கிடந்தோம், அப்போது வந்து பார்த்து சென்றார்கள். எதிரிகள் என்னை அடித்துமுடித்தபிறகு அவர்கள் எங்கே சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தது என்வீட்டிற்கு முன்னால் உள்ள சிமெண்ட்ரோட்டில். நான் மருத்துவரிடம் யார்யார் எந்த இடத்தில் அடித்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் பாஸ்கரன் தலையில் அடித்ததாகவும், தங்கராசு முடியை பிடித்து முகத்தில் பிராண்டி முதுகில் அடித்ததாகவும் சொல்லியுள்ளேன்.

4. பட்டியல் சாட்சி 3 என் மகள். பட்டியல் சாட்சி 4 மற்றும் 5 என் தம்பி. பட்டியல் சாட்சி 6 என் ஊர்க்காரர்தான் எனக்கு உறவினர். என்னை மருத்துவமனையில் போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் 30.05.2023-ம் தேதி இரவு 10.30 மணியளவில் என்னை விசாரித்தார்கள். புகாரை போலீசார் முன்னிலையில் என் தங்கை எழுதினார். வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றும் நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் வேண்டுமென்றே பலிவாங்கும் நோக்குடன் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Case No: CC.No. 211/2023

Deposition of witness for Prosecution அ.சா.2

Name : ராமகிருஷ்ணன்
Father/ Husband Name : கார்மேகம்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 20.01.2026.

முதல்விசாரணை:- சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தூனுக்குடியில் குடியிருந்து விவசாயம் வேலை பார்க்கிறேன். கடந்த 01.06.2023-ம் தேதி காலை 11.30 மணியளவில் தேவகோட்டை தாலுகா போலீசார் தூனுக்குடிக்கு வந்து என் வீட்டருகில் படம் வரைந்து எழுதிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் சண்டை நடந்திருந்தது. அப்போது என்னையும் சுரேசையும் கூப்பிட்டார்கள். அவர்கள் எழுதியுள்ளதை படித்துக் காண்பித்து கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

அ.சா.1 எனக்கு உடன்பிறந்த அக்கா. போலீசார் என்னை அழைத்ததால் சென்று கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம், என்னை அழைத்து இடம் எது என்று கேட்டார்கள் நான் காண்பித்தேன். நான் சொல்லிதான் சுரேஷ் கையெழுத்து போட வந்தாரா என்றால் அவர் அங்கு எதார்த்தமாக வந்தார், போலீசார் தான் அவரை அழைத்தார்கள். சம்பவ இடத்திற்கு அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடுகளில் ஆட்கள் உள்ளார்கள். பார்வை

மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் அ.சா.1 எனக்கு அக்கா என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.